தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032.
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்
ஆணை எண். 164/ந/2024

நாள். 14.03.2025

திரு.S.ராஜன்,
மண்ணச்சநல்லூர்,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையர்,
முசிறி நகராட்சி,
திருச்சிராப்பள்ளி மாவட்டம் – எதிர்மனுதாரர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர், நமச்சிவாய நகர் முதல் தெரு, கதவு எண்.3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.ராஜன் என்பவரின் 31.08.2024 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.09.2024 அன்று பெறப்பட்டு, 164/ந/2024 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர், நமச்சிவாய நகர் முதல் தெரு, கதவு எண்.3/2 என்கிற முகவரியில் வசிக்கும் திரு. S.ராஜன் என்பவர் தனது 30.08.2024 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி தேர்வு நிலை பேரூராட்சி செயல்அலுவலராக 2020–2021ம் நிதியாண்டில் திரு.ஜெ.கணேசன் என்பவர் (01.04.2020ந்தேதி முதல் 31.03.2021ஆம் தேதி வரை) பணியாற்றியுள்ளார். இப்பேரூராட்சியில் 2020–2021ம் நிதியாண்டில் திருச்சிராப்பள்ளி உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறை உதவி இயக்குநரால் 2020–2021 ஆம் ஆண்டுக்கான வருவாய் மற்றும் மூலதன நிதிக்கணக்கு ஒருங்கிணைந்த தணிக்கை அறிக்கை தயார் செய்யப்பட்டுள்ளது. தணிக்கையில் கீழ்க்கண்ட நிதி மோசடிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

முசிறி தேர்வுநிலை பேரூராட்சி 2020–2021 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையின் செலவினம், குறைபாடு, நிதியிழப்பு விவரம் குறித்த தணிக்கை அறிக்கையின் விபரம்.

| வ. எண். | விபரம் | தொகை ரூ. |
|---|---|---|
| 1. | அரசாணையை பின்பற்றாமல் பேரூராட்சிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கொள்முதல் செய்யாமல் குடிநீர் குழாய் உதிரிபாகங்கள், குடிநீர் கைப்பம்பு உதிரிபாகங்களை, மின்மோட்டார் உதிரிபாகங்கள், தெருவிளக்கு, உதிரி பாகங்கள் வாங்கப்பட்டுள்ளன. பொது சுகாதார தளவாட சாமான்கள், விதிமுறைகளை பின்பற்றாமலும் தரச்சான்று பெறாத நிறுவனத்திடமிருந்தும் பொது சுகாதார பொருட்கள், பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்பு நீர், கொரோனா தடுப்பு பொருட்கள், முகக்கவசம், கைவுறை முககவச உடை, குளோரின் மாத்திரைகள் மற்றும் (கிருமிநாசினி) லைசால் முதலியன கொள்முதல் செய்தது தொடர்பான செலவு | 2,01,36,913/– |
| 2. | முசிறி தேர்வுநிலை பேரூராட்சி 2020–2021 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையில் இப்பேரூராட்சிக்கு மினிபவர் பம்பு, கை பம்பு, பம்பு ரூம், மின்மோட்டார், குடிநீர் குழாய் பழுது முதலானவை நீக்கியது. ஜே.சி.பி. (J.C.B.) இயந்திரம் மூலம் முட்செடிகள் அகற்றம், செப்டிக் டேங்க் சுத்தம் செய்தது, சுகாதாரப்பணிக்கு ஆட்கள் போதுமான அளவு இருந்த நிலையிலும் தனியார் கொரோனா ஒழிப்பு பணியாளர்களை தன்னிச்சையாக நியமித்து ஊதியம், செலவினம் ஆகியவை மாவட்ட ஆட்சித்தலைவர் அனுமதித்த அளவைவிட கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மேற்கூரை பழுது பார்த்ததாக பலமுறை செலவினம் மேற்கொண்டது தொடர்பான தொகை. | 94,41,396/– |
| 3. | முசிறி தேர்வு நிலை பேரூராட்சி 2020–2021ம் ஆண்டுக்கான அலுவலகத்திற்கு தேவையான எழுது பொருட்கள், தமிழ்நாடு அரசின் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி உரிய ஒப்பந்ந்ப்புள்ளிகள் பெறப்படாமல் தனியார் மற்றும் இதர நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்டுள்ளது. அரசின் விதிமுறைகள் பின்பற்றப்படாமலும், ஆண்டுத்தேவை கணக்கிடப்படாமலும் அவ்வப்போது எழுதுபொருட்கள், பதிவேடுகள், உதவி இயக்குநரின் முன் அனுமதியை தவிர்க்கும் பொருட்டு ரூ.10,000/–க்குள் செலவுச்சீட்டு தயார் செய்து அவ்வப்பொழுது வாங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவுத்தொகை | 2,64,006/– |
| 4. | (கொரோனா வைரஸ் குறித்தும், தெரு விளக்குகள் எரியாதது, பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ளாதது குறித்து புகார் தெரிவிக்கும் பொருட்டு பேனர் வைத்தது நோட்டீஸ் அச்சடித்ததாக செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு உதவி இயக்குநர் (பேரூராட்சிகள்) முன் அனுமதியை தவிர்க்கும் பொருட்டு ரூ.10,000/–க்குள் செலவினம் மேற்கொள்ளப் பட்டுள்ளது) இக்குறைபாட்டிற்குரிய செலவினம் தொகை | 5,25,093/– |
| | கூடுதல் தொகை | 3,03,67,408/– |

(ரூபாய் மூன்று கோடியே மூன்று லட்சத்து அறுபத்தி ஏழாயிரத்து நானூற்றி எட்டு மட்டும் )

முசிறி பேரூராட்சியில் 2020, 2021 ஆம் ஆண்டுக்கான வருவாய் மூலதன நிதிகணக்கு ஒருங்கிணைந்த தணிக்கை அறிக்கையில் அரசுக்கு ஏற்படும் நிதியிழப்பு குறைபாடு, செலவினம் குறிப்பிடப்பட்டுள்ளது. மக்களின் வரிப்பணம் ஊழல் செய்யப்பட்டுள்ளது. அரசாணை எண்.228 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள் 16.09.1997–ன்படி ரூ.10,000/–க்கும் மேலுள்ள செலவினங்களுக்கு பேரூராட்சி உதவி இயக்குநரின் மேலொப்பம் பெற வேண்டும். இதனை தவிர்க்கும் பொருட்டு ரூ.10,000/–க்குள் மோசடியான செலவு சீட்டுகள் தயார் செய்து செலவினம் செய்யப்பட்டு ஊழல் நடந்துள்ளது. இந்த ஊழல் குறித்து பேரூராட்சிகளின் உதவி இயக்குநரால் செயல் அலுவலர் மீது நடவடிக்கை ஏதும் எடுக்கப்படவில்லை. இதிலிருந்து இந்த ஊழலுக்கு பேரூராட்சி உதவி இயக்குநர் உடந்தையாக இருந்துள்ளார் என்பது உறுதியாகிறது.

2020–2021 ஆம் ஆண்டிற்குரிய தணிக்கையின்போது இருப்புப் பதிவேடு ஆஜர் படுத்தப்படவில்லை. சென்னை பேரூராட்சிகளின் இயக்குநரகத்தின் ந.க. எண். 11093/2019/இ3 நாள் 24.11.2018–ன்படியும் அலுவலக நடைமுறையின்படியும் இருப்புப் பதிவேடு பராமரிக்க வேண்டும். பொருட்கள் வாங்காததினால் தான் இருப்புப் பதிவேட்டில் பதிவு செய்யப்படவில்லை என்பதும் அதனால் இருப்புப்பதிவேட்டை தணிக்கைக்கு ஆஜர்படுத்தவில்லையென்பதும் ஊர்ஜிதமாகிறது. அலுவலக நடைமுறையின்படி இருப்புப்பதிவேடு பராமரிக்காததால் ஊழல் நடந்துள்ளது ஊர்ஜிதமாகிறது.

மினிபம்பு, கைபம்பு, பம்புரூம், பேனர் போர்டு ஒப்பந்ததாரர் மற்றும் மின்மோட்டார், குடிநீர் குழாய் பழுது நீக்கும் ஒப்பந்ததாரர்களுக்கு பணிகளுக்குரிய உரிமம், மற்றும் GST பதிவு எண் இல்லை. அதனால் இந்த இனங்களில் செலவு ஏதும் செய்யப்படாமலயே அரசு நிதி கையாடல் செய்யப்பட்டுள்ளது. மேலும் இப்பணிகளை செய்ய தனியே இப்பேரூராட்சிகளில் பணியாளர்கள் உள்ளனர். அதனால் தனியே ஒப்பந்ததாரர் நியமனம் செய்ய வேண்டியதில்லை. இதனால் அரசு நிதி மோசடி செய்யப்பட்டுள்ளது.

The Tamil Nadu Local Fund Audit Department Manual Vol.II –ல் குறிப்பிட்டுள்ளபடி தணிக்கை தடைக்கு இரண்டு மாதங்களில் பதில் அளிக்க வேண்டும். ஆனால் செயல் அலுவலர் திரு.ஜெ.கணேசன் என்பவரால் பதிலறிக்கை அனுப்பப்படவில்லை. இதிலிருந்து அரசு நிதியில் ஊழல் நடந்துள்ளதால்தான் தணிக்கை தடைக்கு பதில் அளிக்கவில்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

ஆகையால் லஞ்ச ஒழிப்புத்துறை மூலம் இத்தொகைக்கான கணக்கினை ஆய்வு செய்து முசிறி பேரூராட்சியில் பணியிலிருந்த செயல் அலுவலர், தலைமை எழுத்தர், இளநிலை உதவியாளர் மீது துறை ரீதியான நடவடிக்கை எடுத்து அரசு நிதியையும் மக்களின் வரி பணத்தையும் மோசடி செய்ததற்காக பணிநீக்கம் செய்யும்படியும், கிரிமினல் வழக்கு பதிவு செய்யும்படியும் இந்த இழப்பீட்டுத்தொகை முழுவதையும் செயல் அலுவலர் மற்றும் சம்பந்தப்பட்ட நபர்களிடம் இருந்து வசூல் செய்யும்படியும் கேட்டுக்கொள்கிறேன். இப்பேரூராட்சியில் பணியில் உள்ள பொறியாளர் பிளம்பர், கணினி இயக்குநர், எலக்ட்ரிசியன், துப்புரவு ஆய்வாளர்களிடம் இந்த ஊழல் சம்பந்தமாக விசாரணை நடத்த வேண்டும். அப்பொழுதுதான் உண்மை நிலை தெரிய வரும்.

ஆகையால் இந்த புகார் மீது உரிய விசாரணை மேற்கொண்டு அதன் விவரத்தை தெரிவிக்கும்படி பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

2. மனுதாரரது புகார் குறித்து முசிறி நகராட்சி ஆணையரிடம் இம்முறைமன்ற நடுவ 30.09.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் விரிவான அறிக்கை கோரப்பட்டது.

3. முசிறி நகராட்சி ஆணையர் தனது 22.10.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்.

<u>கேள்வி : (1)</u>

அரசாணையை பின்பற்றாமல் பேரூராட்சிக்கு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் கொள்முதல் செய்யாமல் குடிநீர் கைப்பம்பு உதிரிபாகங்கள், மின்மோட்டார் உதிரிபாகங்கள், தெருவிளக்கு உதிரிபாகங்கள் வாங்கப்பட்டுள்ளன. பொது சுகாதார தளவாட சாமான்கள் விதிமுறைகளை பின்பற்றாமலும் தரச்சான்று பெறாத நிறுவனத்திடமிருந்தும் பொது சுகாதார பொருட்கள், பிளீச்சிங் பவுடர், சுண்ணாம்புநீர், கொரோனா தடுப்பு பொருட்கள், முகக்கவசம், கையுறை முககவச உடை, குளோரின் மாத்திரைகள் மற்றும் லைசால் முதலியன கொள்முதல் செய்தது தொடர்பான செலவு தொகை ரூ.2,01,36,913/–

<u>வழங்கப்படும் தகவல்.</u>

"2020–2021 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண்.37ல் குடிநீர் குழாய் உதிரிபாகங்கள் ரூ.20,75,820//, பத்தி எண்.38–ல் குடிநீர் கைபம்பு உதிரி பாகங்கள் ரூ.24,76,341/–, பத்தி எண்.39–ல் மின் மோட்டார் உதிரி பாகங்கள் ரூ.23,31,479/–, பத்தி எண்.40–ல் தெருவிளக்கு உதிரி பாகங்கள் ரூ.24,65,935/–, பத்தி எண்.48–ல் தளவாட சாமான்கள் ரூ.9,04,216/–, பத்தி எண்.49–ல் பொது சுகாதார பொருட்கள் ரூ.6,87,021/–, பத்தி எண்.50–ல் பிளிச்சிங் பவுடர் ரூ.9,57,546/–, பத்தி எண்.51–ல் சுண்ணாம்பு நீர் ரூ.3,55,793/–, பத்தி எண்.52–ல் கொரோனா தடுப்பு பொருட்கள் (முக கவசம், கையுறை, முழு கவச உடை, குளோரின் மாத்திரைகள் மற்றும் லைசால்–கிருமிநாசினி) ரூ.22,18,594/– ஆக கூடுதல் ரூ.1,44,72,745/– கொள் முதல் செய்யப்பட்ட பொருட்களுக்கு பட்டியல் தொகை தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களால் பட்டியல் மேலொப்பம் செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு காசோலை மூலம் வழங்கப்பட்டது. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களின் அறிவுரைகளின்படி பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. புகாரில் மனுதாரர் ரூ.2,01,36,913/– என உண்மைக்கு மாறான தகவலை தெரிவித்துள்ளார். மேலும், இதில் நிதி இழப்போ, முறைகேடுகளோ ஏதுமில்லை என்ற விபரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி : (2)</u>

முசிறி தேர்வுநிலை பேரூராட்சி 2020–2021 ஆம் ஆண்டுக்கான தணிக்கை அறிக்கையில் இப்பேரூராட்சிக்கு மினி பவர் பம்பு, கை பம்பு, பம்பு ரூம், மின் மோட்டார், குடிநீர் குழாய் பழுது முதலானவை நீக்கியது ஜே.சி.பி.(JCP) இயந்திரம் மூலம் முட்செடிகள் அகற்றம், செப்டிக் டேங்க்

சுத்ததம் செய்தது, சுகாதாரப் பணிக்கு ஆட்கள் போதுமான அளவு இருந்த நிலையிலும் தனியாக கொரோனா ஒழப்பு பணியாளர்களை தன்னிச்சையாக நியமித்து ஊதியம், செலவினம் ஆகியவை மாவட்ட ஆட்சித்தலைவர் அனுமதித்த அளவைவிட கூடுதலாக செலவிடப்பட்டுள்ளது. புதிய பேருந்து நிலையத்தில் உள்ள மேற்கூரை பழுது பார்த்ததாக பலமுறை செலவினம் மேற்கொண்டது தொடர்பான தொகை ரூ.94,41,396/–

<u>வழங்கப்படும் தகவல்.</u>

2020–2021 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண.41–ல் மினி பவர் பம்பு பழுது நீக்கியது குறைபாடு ரூ.7,568/–, பத்தி எண்.42–ல் கை பம்பு பழுது நீக்கியது குறைபாடு ரூ.7,356/–, பத்தி எண்.43–ல் பம்ப் ரூம் பேனல் போர்டு பழுது நீக்கியது குறைபாடு ரூ.2,178/–, பத்தி எண்.44–ல் மின் மோட்டார் பழுது நீக்கியது குறைபாடு ரூ.4,390/–, பத்தி எண்.45–ல் குடிநீர் குழாய்கள் பழுது நீக்கியது குறைபாடு ரூ.13,231/–, பத்தி எண்.46–ல் ஜேசிபி. இயந்திரம் கொண்டு சுத்தம் செய்தது குறைபாடு ரூ.14,570/–, பத்தி எண்.47–ல் கழிப்பிடம் செப்டிக்டேங் சுத்தம் செய்தது ரூ.20,513/– ஆக கூடுதல் ரூ.69,806/– மட்டுமே தணிக்கை தடைக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. பத்தி எண்.53–ல் கொரோனா ஒழிப்பு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்கியது குறைபாடு ரூ.18,91,800/– ஆக கூடுதல் ரூ.19,61,606/– என குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், பத்தி எண்.53 மண்டல இணை இயக்குநர், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறை, அவர்களின் கடிதம் ஆ.கோ.எண்.51/அ5/2022 நாள்.15.09.2022–ன்படி தணிக்கை அறிக்கையிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளது. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களின் அறிவுரைகளின்படி பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. புகாரில் மனுதாரர் ரூ.94,41,396/– என உண்மைக்கு மாறான தகவலை தெரிவித்துள்ளார். மேலும், இதில் நிதி இழப்போ, முறைகேடுகளோ ஏதுமில்லை என்ற விபரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

<u>கேள்வி : (3)</u>

முசிறி தேர்வுநிலை பேரூராட்சி 2020–2021–ம் ஆண்டுக்கான அலுவலகத்திற்கு தேவையான எழுதுபொருட்கள், தமிழ்நாடு அரசின் ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளிகள் சட்டத்தின்படி உரிய ஒப்பந்த புள்ளிகள் பெறப்படாமல் தனியார் மற்றும் இதர நிறுவனங்களிடமிருநது பெறப்பட்டுள்ளது. அரசின் விதிமுறைகள் பின்பற்றப்படாமலும் ஆண்டுத்தேவை கணக்கிடப்படாமலும் அவ்வப்போது எழுதுபொருடகள், பதிவேடுகள் உதவி இயக்குநரின் முன் அனுமதியை தவிர்க்கும் பொருட்டு ரூ.10,000/–க்குள் செலவுச்சீட்டு தயார் செய்து அவ்வப்பொழுது வாங்கப்பட்டுள்ளது. இதற்கான செலவுத்தொகை ரூ.2,64,006/–

<u>வழங்கப்படும் தகவல்.</u>

2020–2021 ஆம் ஆண்டு தணிக்கை அறிக்கை பத்தி எண்.56–ல் எழுது பொருட்கள் கொள்முதல் செய்தது தொகை ரூ.2,64,006/– என தெரிவித்து தணிக்கை தடையாக ஏற்படுத்தப்பட்டுள்ளது. தணிக்கை ஆண்டில் பேரூராட்சியில் அன்றாடம் நடைபெற்ற பிறப்பு இறப்பு பதிவு, அறிக்கைகள், சான்றுகள், சொத்துவரி, தொழில்வரி, குடிநீர் கட்டணம் மற்றும் வரியில்லா

இனங்கள் கணினி மூலம் வசூல் செய்தல், கூட்ட அறிக்கைகள், போன்ற அனைத்து பணிகளுக்கும் தேவையான படிவங்கள் மாதந்தோறும் இளநிலை உதவியாளர்கள் மற்றும் கணினி இயக்குபவர்களின் தேவை பட்டியலின் அடிப்படையில் கொள்முதல் செய்யப்பட்டு எழுதுபொருட்கள் இருப்பு பதிவேட்டில் பதியப்பட்டு பயன்படுத்தப்பட்டமைக்கு எழுதுபொருட்கள் வழங்கிய ஒப்பந்ததாரருக்கு காசோலை மூலம் ரூ.2,64,006/– வழங்கப்பட்டுள்ளது. இதில் நிதி இழப்போ, முறைகேடுகளோ ஏதுமில்லை என்ற விபரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்.

கேள்வி : (4)

கொரோனா வைரஸ் குறித்தும், தெருவிளக்குகள் எரியாதது, பொது சுகாதாரப்பணிகள் மேற்கொள்ளாதது குறித்து புகார் தெரிவிக்கும் பொருட்டு பேனர் வைத்தது நோட்டீஸ் அச்சடித்ததாக செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இச்செலவினம் மேற்கொள்ளப்பட்டதற்கு உதவி இயக்குநர்(பேரூராட்சிகள்) முன் அனுமதியை தவிர்க்கும் பொருட்டு ரூ.10,000/–க்குள் செலவினம் மேற்கொள்ளப்பட்டுள்ளது). இக்குறைபாட்டிற்குரிய செலவினத்தொகை ரூ.5,25,093/–

வழங்கப்படும் தகவல்.

2020–2021 ஆம் தணிக்கை ஆண்டில் கொரோனா வைரஸ் விழிப்புணர்வு குறித்து பேருந்து நிலையம், வாரச்சந்தை, தினசரி சந்தை, அனைத்து வார்டு பகுதிகளில் உள்ள தெருக்களில் பிளக்ஸ் போர்டுகள் அமைக்கப்பட்டு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டது குறித்து பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. மேலும் பேரூராட்சியின் அனைத்து குடியிருப்புகள், வணிக நிறுவனங்களுக்கு பிட்நோட்டீஸ் வழங்கி பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. பொது சுகாதார நலன் கருதியும் கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் தகுதியான நிறுவனங்களால் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களின் அறிவுரைகளின்படி பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. பொது சுகாதார நலம் கருதியும், கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்தும் நோக்கில் தகுதியான நிறுவனங்களால் மேற்படி பணிகள் மேற்கொள்ளப்பட்டது. மேலும், திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் மற்றும் மாவட்ட கண்காணிப்பு அலுவலர் அவர்களின் அறிவுரைகளின்படி பொருட்கள் கொள்முதல் செய்யப்பட்டு செலவினங்கள் மேற்கொள்ளப்பட்டது. மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் அனைத்தும் தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர், திருச்சிராப்பள்ளி மண்டலம் அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இதில் நிதி இழப்போ, முறைகேடுகளோ ஏதுமில்லை என்ற விபரத்தினை தெரிவித்துக்கொள்கிறேன்" என சமர்ப்பித்துள்ளார்.

3. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரை 03.12.2024 அன்று நடைபெற உள்ள விசாரணையில் ஆஜராகும்படி இம்முறைமன்ற நடுவ 18.11.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

4. மனுதாரர் 03.12.2024 அன்றைய நேரடி விசாரணையில் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்:

"குடிநீர் பம்புகள் பழுது நீக்கியது ரூ.13,23,105/–, மின்மோட்டார் பழுது நீக்கியது தொடர்பாக ரூ.4,38,970/–, JCB மூலம் முட்செடிகள் அகற்றியவகையில் ரூ.14,57,030/–, மினிபவர் பம்பு பழுது

நீக்கியது ரூ.7,56,800/–. பேனர் போர்டு பழுது நீக்கியது ரூ.2,17,800/–, கைபம்பு பழுது நீக்கியது ரூ.7,35,600/–, குடிநீர் பைப் தொடர்பான சாமான்கள் வாங்கியதில் ரூ.20,75,820/– மற்றும் மின்மோட்டார் உதிரி பாகம் வாங்கியது ரூ.23,31,479/–, கைபம்பு உதிரி பாகம் வாங்கியது ரூ.24,76,341/–. கழிப்பிட செப்டிக் டேங்க் சுத்தம் செய்தது ரூ.20,51,355/– , பொதுசுகாதார தளவாட சாமான்கள் வாங்கியது தொடர்பாக ரூ.9,04,216/–, பொது சுகாதாரம் பொருட்கள் கொள்முதல் செய்தது தொடர்பாக ரூ.6,87,021/–. பிளீச்சிங் பவுடர் வாங்கியதில் ரூ.9,57,546/–, சுண்ணாம்புநீர் வாங்கியது தொடர்பாக ரூ.3,55,793/–. கொரோனா தடுப்பு பொருட்கள் வாங்கிய வகையில் ரூ.22,18,594/–, கொரோனா ஒழிப்பு ஊதியம் வழங்கியதில் (கூலி வழங்கியது) ரூ.18,91,800/–, கொரோனா காலத்தில் இலவச உணவு வழங்கிய வகையில் ரூ.1,45,876/–. எழுதுபொருட்கள் வாங்கிய வகையில் ரூ.2,64,006/–, புதிய பேருந்து நிலையத்தில் பழுது நீக்கியது தொடர்பாக ரூ.4,23,060/–

மேற்படி பணிகள் விதிகளுக்கு உட்படாமல், மேலதிகாரிகளின் ஒப்புதல் இல்லாமலும், அதிகமாக செலவு செய்ததாக கணக்கு காட்டப்பட்டு, முறைகேடு செய்யப்பட்டுள்ளது.

சில நிறுவனங்களிடம் வாங்கிய பொருட்களுக்கு GST எண். இல்லை. அந்த நிறுவனங்களும் எங்கிருக்கிறது என்ற விவரம் தெரியவில்லை. நகராட்சியில் இருப்பு பதிவேடும் இல்லை. கழிவு பொருட்களும் இல்லை. மேற்கண்ட விவரங்கள் என்னால் Local Fund Audit மூலம் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தில் பெறப்பட்டது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். என்னுடைய கற்பனை எதுவும் கிடையாது. மேற்கண்ட எனது குற்றச்சாட்டுக்களை இன்று **03.12.2024** அன்று இம்முமைன்ற நடுவத்தில் நேரடியாக ஆஜராகி தெரிவித்துள்ளேன்" என தெரிவித்துள்ளார்.

**5.** முசிறி நகராட்சி ஆணையர் தனது **02.12.2024** நாளிட்ட மின்னஞ்சலில் கனமழையின் காரணமாக விழுப்புரம்–திண்டிவனம் இடையே சாலை போக்குவரத்து பாதிக்கப்பட்டமையால் **03.12.2024** அன்றைய விசாரணைக்கு ஆஜராக இயலவில்லை என்பதை தெரிவித்து, தனக்கு வேறொரு தேதியை விசாரணைக்கு நிர்ணயம் செய்யுமாறு இம்முறைமன்ற நடுவத்தை பணிவுடன் கேட்டுக்கொண்டதனடிப்படையில், நகராட்சி ஆணையரின் வேண்டுகோளை ஏற்று **03.01.2025** அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறைமன்ற நடுவத்தால் அழைப்பாணை அனுப்பப்பட்டது.

**6.** முசிறி நகராட்சி ஆணையர் **03.01.2025** அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்ட தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.

மனுதாரர் புகாரில் அளித்துள்ள தொகை ரூ.2,01,36,913/– ஆகும். இத்தொகையில் ரூ.56,64,168/–ற்கான தணிக்கை தடை பத்திகள் நீக்கம் செய்யப்பட்டுள்ளது. தற்பொழுது ரூ.1,44,72,745/–ற்கான நிலுவையாக பத்திகள் உள்ளது.

மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள செலவுத்தொகை ரூ.94,41,396/– இதில் தற்பொழுது உள்ளாட்சி தணிக்கை அலுவலர் அவர்களின் அ.கோ.எண்.51/அ5 நாள் 15.09.2022 மற்றும் 22.05.2024–ல் பத்தி எண்.63,55,59–ல் ரூ.31,01,460/– நீக்கம் செய்யப்பட்டது. நிலுவை தொகை ரூ.63,39,936/– இதற்கான தணிக்கை பத்தி நிலுவையில் உள்ளது. மனுதாரர்

புகாரில் தெரிவித்துள்ள செலவுத்தொகை ரூ.2,64,006/–ற்கான தணிக்கை பத்தி நிலுவையில் உள்ளது.

மனுதாரர் புகாரில் அளித்துள்ள தொகை ரூ.5,25,093/– குறிப்பிட்டுள்ளார். உள்ளாட்சி நிதி தணிக்கை அலுவலர் அ.கோ.எண்.51/25 நாள் 20.01.2023 பத்தி எண்.57–ல் தணிக்கையில் ரூ.5,25,093/–ற்கு நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

மேற்காணும் நிலுவையில் உள்ள தணிக்கைத்தடை பத்திகளை நீக்கம் செய்வதற்கு துரித நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என இம்முறைமன்ற நடுவத்தில் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

7) மனுதாரரின் புகார் மனு, மனுவுடன் இணைத்தனுப்பப்பட்ட ஆவணங்கள் மற்றும் மனுதாரர் வாக்குமூலம், முசிறி நகராட்சி ஆணையரின் அறிக்கை, மற்றும் அவரது வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்கள் அனைத்தும் இம்முறைமன்ற நடுவத்தினால் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:-

மனுதாரர் தனது புகார் மனுவில் முசிறி நகராட்சியில், குடிநீர் பம்புகள் பழுது நீக்கியது, மின்மோட்டார் பழுது நீக்கியது, JCB மூலம் முட்செடிகள் அகற்றியது, மினிபவர் பம்பு பழுது நீக்கியது, பேனர் போர்டு பழுது நீக்கியது, கைபம்பு பழுது நீக்கியது, குடிநீர் பைப் தொடர்பான சாமான்கள் வாங்கியது, மின்மோட்டார் உதிரிபாகம் வாங்கியது, கைபம்பு உதிரி பாகம் வாங்கியது, கழிப்பிட செப்டிக் டேங்க் சுத்தம் செய்தது, பொது சுகாதார தளவாட சாமான்கள் வாங்கியது, பொது சுகாதார பொருட்கள் கொள்முதல் செய்தது, பிளீச்சிங் பவுடர் வாங்கியது, கொரோனா தடுப்பு பொருட்கள் வாங்கியது, கொரோனா ஒழிப்பு ஊதியம் வழங்கியது, கொரோனா காலத்தில் இலவச உணவு வழங்கியது, எழுதுபொருட்கள் வாங்கியது, மற்றும் புதிய பேருந்து நிலையத்தில் பழுது நீக்கியது போன்ற பல பணிகள் விதிகளுக்கு உட்படாமல், மேலதிகாரிகளின் ஒப்புதல் இல்லாமலும், அதிகமாக செலவு செய்ததாக கணக்கு காட்டப்பட்டு முறைகேடு செய்யப்பட்டுள்ளது என்றும், சில நிறுவனங்களிடம் வாங்கிய பொருட்களுக்கு GST எண் இல்லை, அந்த நிறுவனங்கள் எங்கிருக்கிறது என தெரியவிலலை எனவும், நகராட்சியில் இருப்பு பதிவேடும் இல்லை, கழிவு பொருட்களும் இல்லை என பல குற்றச்சாட்டுக்களை தெரிவித்துள்ளார்.

இந்நேர்வில், மனுதாரர் புகாரில் தெரிவித்துள்ள;

(1) செலவினங்களான ரூ.2,01,36,913/–ல், ரூ.56,64,168/– உள்ளாட்சி நிதி தணிக்கைத்துறையால் நீக்கம் செய்யப்பட்டு தற்பொழுது நிலுவையாக ரூ.1,44,72,745/– உள்ளதாகவும்; ரூ.94,41,396/–ல் ரூ.31,01,,460/– தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டு ரூ.63,39,936/– நிலுவையாக உள்ளதாகவும், ரூ.2,64,006/– தணிக்கை பத்தி நிலுவையில் உள்ளதாகவும், ரூ.5,25,093/–ல் உள்ளாட்சி தணிக்கை அலுவலர் அ.கோ.எண்.51/25 நாள் 20.01.2023 பத்தி எண்.57ன் வழி ரூ.5,25,093/– முழுவதுமாக நீக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதும் முசிறி நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

மனுதாரர் புகார் மனுவில் சுமார் ரூ.3,03,67,408/– அளவிற்கு நிதியிழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள நிலையில், இதுவரை ரூ.92,90,721/– மட்டும் உள்ளாட்சி தணிக்கை அலுவலரால் தணிக்கை தடை நீக்கம் செய்யப்பட்டு எஞ்சிய செலவினங்களுக்கான

தொகை தணிக்கையில் நிலுவையாக உள்ளதாக நகராட்சி ஆணையரின் வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் தணிக்கை தடை நீக்கப்பட வேண்டிய தொகை பெருமளவு எஞ்சியுள்ள நிலையில் மனுதாரர் புகாரில் குறிப்பிட்டிருக்கும் அனைத்து செலவினங்களை சிறப்பினமாக கருதி, சிறப்பு உள்ளாட்சி நிதி தணிக்கை (Special Local Fund Audit) மூலம் தணிக்கை மேற்கொள்ளுமாறு இயக்குநர், உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை அவர்களுக்கு அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2025–ஆம் ஆண்டு, மார்ச் திங்கள் 14–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு.எஸ்.ராஜன்,
த/பெ.திரு.சஞ்சீவி,
3/2, நமச்சிவாய நகர் முதல் தெரு,
மண்ணச்சநல்லூர் வட்டம், திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

2)நகராட்சி ஆணையர்,
முசிறி நகராட்சி,
முசிறி. திருச்சிராப்பள்ளி மாவட்டம்.

3)இயக்குநர்,
உள்ளாட்சி நிதித் தணிக்கைத்துறை,
சென்னை.

4)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5)ஒருங்கிணைப்பாளர்(Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல். மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச்செயலர்

இகோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

செயலாளர்.